# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4105/F/2024**

திரு.சி.மூர்த்தி .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியம்,
கோட்டம் 1, H.L.L.Nagar,
தண்டையார்பேட்டை,
சென்னை-81. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.சி.மூர்த்தி அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.இராம.செந்தில்குமார், கண்காணிப்பாளர், HLL நகர், தண்டையார்பேட்டை, சென்னை-81 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 19/07/2021 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் திருமதி.அ.சாவித்திரி க/பெ P.அழகிரி அரசின் இலவச வீடு கட்டும் மானிய தொகை வழங்கியது தொடர்பாக 29.06.2021

நாளிட்ட புகார் மனுவிற்கு பதில் அளிக்க கோருவது HFA 44, வீட்டின் பயனாளியின் குடியிருப்பு சான்று நகல்கள் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் கார்டு அட்டை நகல் என்பன போன்ற தகவல்களை 2 இனங்களில் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 18.08.2021 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு முழுமையான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் 07.09.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 18.08.2021 மற்றும் 14.11.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் தனது 19.07.2021 நாளிட்ட 6(1) மனுவிற்கு பொதுத்தகவல் அலுவலரால் 18.08.2021 மற்றும் 14.11.2025 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இப்புகார் மனுவினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4105/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியம்,
கோட்டம் 1, H.L.L.Nagar,
தண்டையார்பேட்டை,
சென்னை-81.

**புகார்தாரர்:-**

திரு.மூர்த்தி,
எண்.03/105, தியாகி விசுவநாத தாஸ் நகர்,
கொசப்பூர்,
சென்னை-600 060.

Copy to file: KR/PA